செய்தி வெளியீடு எண். 181 நாள்: 06.04.2018

**சமுதாய வளைகாப்பு விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபாண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.,இ.ஆ.ப., ஆகியோா 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கு நலங்கு வைத்து சீர்வரிசைகளை வழங்கினார்கள்**

ஆவடி தனியார் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பாக நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபாண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (06.04.2018) 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கு நலங்கு வைத்து சீர்வரிசைகளை வழங்கினார்கள்.

பெண்மைக்கு எத்தனையோ சிறப்புகள் இருந்தாலும் அவை அனைத்திலும் உச்சமாய் இருப்பது தாய்மை. தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது. தாய்மை என்பது பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் மற்றும் மறு பிறப்பாகும். தாய்மை ஒரு பெண்ணுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால் ஒரு தாய் ஒரு குழந்தையை கருவுற்று ஆரோக்கியமான குழந்தையை உருவாக்கவும், சுகப்பிரசவம் நிகழவும் கருவுற்ற தாயின் உடல் மற்றும் மன நிலை நல்ல நிலையில் இருப்பது அவசியம்.

வளமான நாட்டை உருவாக்க இன்றைய குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்தால்தான் நாளைய சமுதாயம் ஆரோக்கியமாக அமையும். எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு கர்ப்ப கால முன் பின் பராமரிப்பு, குழந்தைக்கு உணவூட்டும் முறைகள், குழந்தை வளர்ப்பு, தடுப்பூசிகள் போன்ற பல தகவல்கள் குறித்து அனைத்து கர்ப்பிணி பெண்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வளர்ச்சித் திட்டத்தின் சார்பாக 16 திட்டங்களில் தொகுதி அளவிலான கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்த திட்டமிடப்பட்டு வளைகாப்பு விழா நடத்தப்பட்டது. மதுரவாயில், அம்பத்தூர், திருவொற்றியூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டது.

வளைகாப்பு விழாவில் கலந்து கொண்ட 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை தாம்பூலம், பூ, புடவை, மாலை சீர் வரிசை வழங்கப்பட்டு, நலங்கு வைத்து வாழ்த்தப்பட்டது மற்றும் கலந்துகொண்டவர்களுக்கு 5 விதமான சாதத்துடன் உணவு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.இரா.ஜெயஸ்ரீ, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.வெ.முத்துசெல்வி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**